**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 3/2025**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 23 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது சித்தப்பா. அ.சா.1 முத்துமாரி எனது அம்மா. அ.சா.2 முருகன் எனது அப்பா. எதிரிக்கும், எங்களுக்கும் சொத்து பிரச்சனை இருந்து வந்தது. 08.05.2024 ம் தேதி, இரவு 09.00 மணிக்கு நானும், எனது அம்மா, எனது தம்பி ஆகியோர்கள் வீட்டு வாசலில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தான் எனது அப்பா முருகன் சாப்பாடு வாங்கிக்கொண்டு வந்தார். அப்போது எதிரி எனது அப்பாவை வீட்டு முன்பு வழிமறித்து நின்று சொத்தில் பங்கு கேட்டார். அதற்கு எனது அப்பா எதிரியை பார்த்து "உனக்கு ஏற்கனவே சொத்து எழுதிக் கொடுத்தாச்சு, நீ எதற்காக கேட்கிறாய்" என்று சொன்னார்.

அதன் பின்னர் எதிரி எனது அப்பாவை பார்த்து "நீ உயிரோடு இருந்தால் தானே என்று சொல்லி அரிவாளை எடுத்து எனது அப்பாவின் தலையிலும், வலது கண்ணிலும், கையிலும், நாடியிலும், முதுகிலும், மணிகட்டிலும் வெட்டினார். நானும், எனது அம்மா, தம்பி ஆகியோர்கள் தடுக்க போனோம். ஆனால் எங்களால் தடுக்க முடியவில்லை. அந்த இடத்தில் எதிரி எனது அம்மாவை பார்த்து பெண் என்றும் பார்க்காமல் தேவடியா என்று திட்டினார். எனது அம்மாவை பார்த்து எதிரி சொத்து கொடுக்கவில்லை என்றால் "உன்னையும் வெட்டுவேன், உனது பிள்ளைகளையும் வெட்டுவேன்" என்று திட்டி விட்டு போய்விட்டார். நாங்கள் என்ன பண்ண வேண்டும் என்று தெரியாமல் இருந்தோம். அப்போது எதிர் வீட்டில் இருந்த மகேந்திரன் என்பவர் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி எனது அப்பாவை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு நானும், எனது அம்மா, எனது ஆச்சி பேச்சியம்மாள் ஆகியோர்கள் சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக எனது அப்பாவை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது அம்மா உடன் சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:51:11 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 3/2025**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | கல்லூரி படிப்பு |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 17 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லூரியில் படித்து வருகிறேன். அவர் எனது சித்தப்பா. அ.சா.1 முத்துமாரி எனது அம்மா. அ.சா.2 முருகன் எனது அப்பா. எதிரிக்கும், எங்களுக்கும் சொத்து பிரச்சனை இருந்து வந்தது. 08.05.2024 ம் தேதி, இரவு 09.00 மணிக்கு நானும், எனது அம்மா, எனது அக்கா ஆகியோர்கள் வீட்டு வாசலில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தான் எனது அப்பா முருகன் சாப்பாடு வாங்கிக்கொண்டு வந்தார். அப்போது எதிரி எனது அப்பாவை வீட்டு முன்பு வழிமறித்து சொத்து பற்றி பேசினார். அதற்கு எனது அப்பா மறுத்தார். அதற்கு கோபத்தில் எதிரி அரிவாளை வைத்து எனது அப்பாவின் தலையின் பின்புறமும், வலது கண்ணிற்கு மேலும், நாடியிலும், இடது கையிலும், மணிக்கட்டிலும், முதுகிலும் வெட்டினார். நானும், எனது அம்மா, அக்கா ஆகியோர்கள் தடுக்க போனோம். அதற்குள் எதிரி எனது அம்மாவை பார்த்து தேவடியா என்று சொல்லி சொத்து

கொடுக்கவில்லை என்றால் "உன் புருஷன் நிலைமை தான் உனக்கும், உன் பிள்ளைகளுக்கும்" என்று சொல்லி விட்டு ஓடி விட்டார். அதன் பின்னர் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி எனது அப்பாவை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு எனது அம்மா, எனது அக்கா, எனது ஆச்சி பேச்சியம்மாள் ஆகியோர்கள் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். நான் பின்னால் சென்றேன். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக எனது அப்பாவை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது அம்மா உடன் சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:51:18 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 3/2025**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரன் | தொழில் | : | செண்ட்ரிங் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது உடன் பிறந்த சகோதரர். அ.சா.1 முத்துமாரி எனது மற்றொரு அண்ணனின் மனைவி. அ.சா.2 முருகன் எனது மூத்த சகோதரர். எதிரிக்கும், எனது மூத்த அண்ணனுக்கும் சொத்து பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நான் வாடகை வீட்டில் இருந்தபோது எதிரி, அ.சா.2 முருகனை வெட்டி விட்டதாக கேள்விபட்டேன். நான் முருகனை 10 நாட்கள் கழித்து பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தேன். அவருக்கு தலையில் கட்டு போடப்பட்டிருந்தது. வேறு காயங்கள் எதையும் நான் பார்க்கவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:51:25 +0530